**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**<u>OS.No.54/2021</u>**

தேதி: 09.07.2026

பெயர் : சரவணன் (வா.சா.1) த/பெ: பொன்னுசாமி

## <u>6, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

1. நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன், பெயிண்டர் வேலை செய்கிறேன். யார் யார் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அண்ணாதுரை மனைவி பாலா, ஹரிஹரன், கலைச்செல்வி, மற்றவர்கள் பெயர் ஞாபகமில்லை. 5 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் ஹரி, கலை என 2 மற்றும் 4ம் பிரதிவாதிகள் பெயர் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரிதான். நான் வாரிசு என்ற முறையில் வழக்கு சொத்தில் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண்.116ல் 1 ஏக்கர் 84 சென்ட், சர்வே எண்.117ல் 36 சென்ட் ஆகும். என்னுடைய வழக்கிலும் சர்வே எண்.116ல் 1 ஏக்கர் 84 சென்ட் என சொத்து விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரையில் சர்வே எண்.116/3A ல் ஹெக்டேர் 80 ஏர்ஸ் எனவும் ஏக்கர் 0.46 சென்ட் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். யார் யாருக்கு கொடுத்தேன் என்றால் பாலா மற்றும் பாலாவின் வாரிசுகள் 4 பேரும் அறிவிப்பு அனுப்பினேன். எந்த தேதியில் அறிவிப்பு அனுப்பினேன் என்று தெரியாது. என்ன விவரங்கள் கூறி அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சொத்தை ஏமாற்றி விற்றது சம்பந்தமாகவும் பாகப்பிரிவினை கேட்டும் அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நோட்டீஸ் கொடுத்த விவரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வழக்குரையில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது குறித்தோ அந்த அறிவிப்பை ஆவணமாக தாக்கல் செய்வதாக குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த வழக்கை யார்

எதிர்வாதம் செய்து வருகிறார் என்றால் கலைச்செல்வன் மட்டும் வழக்கறிஞர் வைத்து வழக்கை நடத்தி வருகிறார். கலைச்செல்வன் என்ன எதிர்வாதம் செய்து வருகிறார் என்றால் சொத்து அவருடையது என வழக்கு நடத்தி வருகிறார். வழக்கு தாக்கல் செய்த தேதியில் சொத்தை யார் வைத்திருந்தார்கள் என்றால் கலைச்செல்வன் வைத்திருந்தார். வழக்கு சொத்து ஆதியில் வீரப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அவரிடமிருந்து என் தாத்தா கிரையம் பெற்றார். என் தாத்தா பெயர் வீரமலை. என் தாத்தா எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் 1951 ல் வாங்கினார். வீரமலைக்கு 2 ஆண், 2 பெண் வாரிசுகள் ஆகும். என் அப்பா பொன்னுசாமி மூத்தவர், குண்டுமுப்பன் என் அப்பாவின் தம்பி ஆவார். பெண் வாரிசுகள் பெயர் சின்னம்மாள் மற்றொரு பெண் வாரிசு இறந்துவிட்டார் அவர் பெயர் தெரியாது. சின்னம்மாள் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. சின்னம்மாள் இறந்துவிட்டார் அவரது வாரிசுகளையும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. வீரமலையின் மற்றொரு பெண் வாரிசு சின்ன வயதில் இறந்துவிட்டார். வழக்குரையில் வீரமலைக்கு ஆண் வாரிசுகள் மட்டும் உள்ளார்கள் என குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வீரமலையின் பெண் வாரிசுகள் பற்றி வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். வீரமலை 1970 ல் இறந்துவிட்டார். வீரமலை 1970 ல் இறந்தார் என வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். பொன்னுசாமியின் இறப்பு சான்றிதழ் மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் எனவும் வீரமலையின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது வீரமலையின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்ய தயராக உள்ளேன். வீரமலை உயிருடன் இருக்கும் வரை சொத்துகளை யாருக்கும் பாகம் பிரித்து கொடுக்காமல் இறந்துவிட்டார் என வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா பொன்னுசாமி 25.01.1992 ல் இறந்துவிட்டார். அந்த விவரத்தை கூறியுள்ளேனா என்றால் இல்லை. பொன்னுசாமிக்கு யார் யார் வாரிசுகள் என்றால் நானும், செந்தில்குமார் மற்றும் சரோஜா ஆகியோர் வாரிசுகள் ஆவர். வழக்குரையில் செந்தில் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். செந்தில் 2016 ல் இறந்தார். இறக்கும்போது அவருக்கு 51 வயது இருக்கும். அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. என் அக்கா சரோஜா திருமணமானவர். அவர் 2014 ல் இறந்தார். அவருக்கு வாரிசுகள் உள்ளார்கள். சரோஜாவுக்கு 2 ஆண் மற்றும் 2 பெண் குழந்தைகள் உள்ளனர், கணவர் இறந்துவிட்டார். வீரமலையின் சொத்துகள் குறித்து பொன்னுசாமியின் வாரிசுகளான

சரோஜாவின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சரோஜாவின் வாரிசுகள் பற்றி வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் அப்பாவின் தம்பி குண்டுமுப்பன் எப்போது இறந்தார் என்றால் தேதி ஞாபகமில்லை. குண்டுமுப்பனுக்கு ஒரு ஆண் அண்ணாதுரை மற்றும் ஒரு பெண் செல்வி வாரிசுகள் ஆவர். செல்வி என்பவரை இவ்வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவில்லை. அண்ணாதுரை எப்போது இறந்தார் என்றால் தேதி ஞாபகமில்லை. அண்ணாதுரைக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிகள் சேனப்பநல்லூர் கிராமத்தில் நிரந்தரமாக வசிக்கிறார்கள் என்றால் சரிதான். நான் சேனப்பநல்லூர் கிராமத்தில் நிரந்தரமாக வசிப்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் சேனப்பநல்லூரில் வசிக்கவில்லை 1973ல் வேலை விஷயமாக வெளியூர் சென்றுவிட்டேன். ஆனால் வழக்குரையில் நிரந்தர முகவரி என சேனப்பநல்லூர் விலாசம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தற்போதைய முகவரி என திருச்சி, வடக்கு காட்டுர் என காட்டியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தினை அண்ணாதுரை கலைச்செல்வனுக்கு 2011ல் விற்றுள்ளார். அந்த கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்திருக்கிறேன் ஆனால் படிக்கவில்லை. மேற்படி கிரைய பத்திரத்தை வழக்கு தாக்கல் செய்யும் போது பார்த்துள்ளேன். 2011ம் ஆண்டு கிரைய பத்திரத்தை பொறுத்து நீதிமன்றத்தில் 2021ல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 10.08.2020ம் தேதி சான்று நகல் எடுத்துள்ளேன் என்றால் சரிதான். அண்ணாதுரை விற்ற கிரைய சொத்தின் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் என் தாத்தா வீரமலை பெயரில் இருந்தது. வீரமலை பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 16.07.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

/ உண்மை நகல்/

(ஒப்பம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.